# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1717/17 - 2011 අගෝස්තු 03 වැනි බදාදා - 2011.08.03

*1717/17 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : தொ/கா/1/அத்/அதி/88.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணதில், களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொட பிரதேச செயலாளர் பிரிவில், பஹன்வத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. க4234 மற்றும் 2010.07.20ஆந் திகதிய துண்டு இல. 1 தொடக்கம் 3 வரை காட்டப்பட்டுள்ள 0.0461 ஹெக்டயார் மொத்த விஸ்தீரண முடைய காணித் துண்டுகள் மூன்றின் (03) விபரங்கள் பின்வருமாறு:-

**1. துண்டு இல. 1**
காணியின் பெயர் : பஹன்வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : கே. கே. டீ. கே. ரணவீர, ஹெலதுவவத்த, மதுகம ; விஸ்தீரணம் : 0.0202 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**
காணியின் பெயர் : பஹன்வத்த ; விபரம் : வயல் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ. டீ. எஸ். எல். த மெல், இல. 144/1, கொடகெதர வீதி, மடதாத, பிலியந்தல ; விஸ்தீரணம் : 0.0139 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**
காணியின் பெயர் : பஹன்வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : செல்வதுரை, ஹெலதுவவத்த, மதுகம ; விஸ்தீரணம் : 0.0120 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தொடங்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். டபிள்யூ. ரீ. ஆர். வெத்தசிங்க,
பிரதேச செயலாளர்,
தொடங்கொடை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொடங்கொடை,
*2011.07.26.*

*08 - 481*

---

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : நவ/கா/1/1/9/எல்ஏ/4516.
காணி, காணி அபி. அமைச்சின் இல. : 03ஜே/82/ஐஆர்/219.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *2002.12.30 ஆந் திகதிய 1269/1 ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானியில்* பிரசுரிக்கப்பட்ட இ. கி. வ. இல. 3219 இல் துண்டு இல. 266 இலும் துண்டு இல. 268 இலும் உரிமை கோருவோரின் பெயர் ஆர். எச். எம். சுமனாவதீ என பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன், உரிமை கோருவோரின் பெயர் ஆர். எச். எம். புஞ்சி பண்டா எனத் திருத்தப்படு கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

டபிள்யூ. எல். டீ. என். குமார,
பிரதேச செயலாளர்,
நவகத்தேகம.

பிரதேச செயலகம்,
நவகத்தேகம,
*2011.07.28.*

*08-482*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.